[Sri M. S. Selvarajan] [30th October 1958

விவசாயிகளுக்கும் நீதி வழங்க வேண்டியதாகும். சிலர் நினைப்பது போல மீதி நிலத்தை அரசாங்கமே வைத்துக் கொண்டு அரசாங்கம் தானே வைத்துக் கொண்டு தானே ஒரு நிலப்பிரபுபோல பயிர் செய்து மக்களுக்கு நீதி வழங்க சாத்தியமிருப்பதாகவும் தெரியவில்லை. நிலத்தை அப்படியே விட்டு வைத்து லாபத்தில் வரியாக பங்கு பெற்றால் என்ன என்ற கருத்தும் இருந்து வருகிறது. அதோடு இன்றைக்கு தொழில் துறையிலே, மற்ற துறையிலே தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது, நிலத்திற்கு மாத்திரம் உச்ச வரம்பு கட்டுவதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பார்க்கும்போது தேசம் பூராவையும் எடுத்துக்கொண்டு, நம் ராஜ்யத்தைப் பற்றி மட்டும் யோசிக்காமல், ஆர அமர யோசிக்க வேண்டியிருக்கிறது. இதிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாம் இப்போது உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே ஈடுபட்டிருக்கிறோம். நாம் அத்தகைய ஒரு பணியில் ஈடுபட்டிருக்கும்போது இந்த பிரச்னையில் இறங்குவது நாட்டுக்கு உகந்ததா என்று தீர்மானித்தாக வேண்டியிருக்கிறது. அரசாங்கம் இப்போது சோஷலிஸ அடிப்படையில் சமுதாயத்தை அமைப்பதிலே தன்னை பணித்துக் கொண்டிருக்கிறது. இதனால் நிலவுடைமைகள் துண்டாடப்பட்டு, மக்கள் சக்தி சரிவரப் பயன்படுத்தப்பட முடியாமல் போவது இந்த நாட்டுக்கு, இந்தக் காலத்திற்கு உகந்ததா என்று பார்க்க வேண்டும். உலக நாடுகளில் விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்வதற்கு ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கும்போது நாமும் அதிக மனித சக்தி விரயமாகாமல் குறைந்த செலவில் விவசாயம் செய்வதற்கு வழி என்ன, நல்ல விளைச்சல் அடைய வழி என்ன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய வேண்டும். அதல்லாமல் நிலத்தைத் துண்டாடிவிட்டு நிலமில்லாதவர்கள் கையில் கொடுப்பதால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்ததாகாது. இதைப்பற்றி அவசர அவசரமாக எமோஷனல் டெஸிஷனுக்கு வராமல் இண்டெலெக்சுவல் டெஸிஷனுக்கு வரவேண்டும். உணர்ச்சி வசப்பட்டு செய்யப்பட்டது என்றில்லாமல் நன்றாக ஆர அமர யோசித்து, சிந்தித்துச் செய்வதன் மூலமாகத்தான் உண்மையாக இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். நம் ராஜ்யத்தில் இருக்கின்ற கோவில்களின் சொத்துக்களை மடாலயங்களுக்கு இருக்கக்கூடிய சொத்துக்களை யாரோ நினைப்பது போல விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. ஏனென்றால் உடமைக்காரர்களுக்கும், விவசாயிகளுக்கும் மத்தியில் உள்ள இடைத் தரகர்கள் இன்னும் நீங்கிய பாடில்லை. விவசாயிகளுக்கும் நிலவுடமைக்காரர்களுக்கும் இடையில் இருக்கும் தரகர்களைப் பற்றி நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவிலே ஓமநல்லூர் என்ற ஒரு இடத்தில் திருவாடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமான நிலங்களை கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தஞ்சை போன்ற ஜில்லாக்களை எடுத்துக் கொண்டாலும் இது போன்ற முறைகள், அவர்களுக்கு உற்சாகம் ஏற்படக் கூடிய வகையில், ஏற்படலாம். அந்த முறை ஏற்படுமானால் அதை வரவேற்க வேண்டும். கோவில்கள், மடங்கள் விஷயத்தில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருக்கலாம். கூட்டுறவு அடிப்படையில் இதைப் பரீட்சை செய்து பார்த்தால் வரவேற்க வேண்டியதுதான். ஆகவே, இந்த நிலைமையில், நமது கொள்கை இருக்கக்கூடிய நிலைமையில் இந்தத் தீர்மானம் சபை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்பது எனது பணிவான கருத்து.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory rules, orders, notifications.

145. *Notification issued with G.O. Ms. No.* 3602, ***Revenue, dated*** **25th** *September* 1958 ***amending certain Rules and notification issued*** *under the Madras General Sales Tax Act*, 1939. [***Laid on the table*** *of the House under section* 19 (6) *of the Madras General Sales tax Act*, 1939 (*Madras Act IX of* (1939).]

30th October 1958]

146. *Notification issued with G.O. No.* 3203, *Revenue, dated* 28*th August* 1958 *amending rule* 5 *and Forms I, II and VII of the Madras General Sales Tax Rules,* 1939. [*Laid on the table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939 (*Madras Act IX of* 1939).]

B.—Reports and other papers.

56. *Short review of the activities of the Department of Handlooms for the period from* 1*st April to* 31*st December* 1957.

57. *A short review of the activities of the Probation Department for the half-year ending* 30*th June* 1958.

58. *A short report on the working of Co-operative Societies, in the State of Madras for the half-year ended* 31*st December* 1957.

59. *Short review of the activities on the working of the Fire Service Branch for the half-year ending* 30*th June* 1958.

60. *Proceedings and connected papers of the Legislature Committee on Local Administration* (*Part V*) (*Parts I to IV already circulated*).

61. *A short report on the activities and achievements of the Jail Department in the Madras State during the half-year ending* 30*th June* 1958.

62. *Statement showing the activities of the Accommodation Control Department for the half-year ending* 30*th June* 1958 (*G.O. Ms. No.* 67, *Home, dated* 8*th January* 1958).

63. *Salient features on the Administration of Civil Justice for the half-year ending* 30*th June* 1958.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS